585
393

உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ரு. } பிரமாதீசஞு பங்குனிமீ { பகுதி கஉ

தமிழ் வித்துவான்களும், சபைகளும்.

16—1—14 ல் வெளிவந்த வைசியமித்திரன் 2 ஆவது பக்கத்தில் "சபைகளும், வித்துவ சிரோன்மணிகளும்" எனத் தலைப்பெயரிட்டு ஸ்ரீமாந் P. L. சேவுகன் செட்டியாரவர்கள் எழுதியவற்றைப் பார்த்தோம். சபைகளில் உபந்யசிக்க வருகிற வித்துவான்களில் சிலர் கலகம் விளைவிக்கிறார்கள் என்றும், நான் பெரியவன் நீ சின்னவன் என்று துவேஷ வார்த்தைகள் பேசிப் போர் புரிந்துவருவது சரியல்லவென்றும், வித்துவான்கள் பிரசங்கம் செய்யப்போகும் இடங்களில் கலகம் விளைவித்துக்கொள்கிறார்களே யென்றும், காங்கிரஸ் முதலிய சபைகளைப் பார்த்தால் மிக அமைதியாயும் உலகமே ஒற்றுமையுடனிருப்பது போலவும் காணப்படுகின்றதே, என்றும் ஆனதால் வித்துவான்கள் ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென்றும் செட்டியாரவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

நம் நாட்டில் தமிழ்ப்பிரசங்கங்கள் நடைபெறும் சபைகட்குப் பலமுறை நாம் போய்வருகிறோம். பல ஜாதியாரும் பல மதஸ்தரும் பலகொள்கையினருமான பண்டிதர்கள் வந்து உபந்யசிக்கின்றார்கள். இதுவரை எந்தச் சபையிலாவது எந்த வித்துவானாவது எவ்வித கலகமும் விளைத்ததாகக் கேள்விப்பட்டதுமில்லை. அப்படியிருக்க நண்பர் செட்டியாரவர்கள் இவ்வாறு எழுதியதை நோக்க நமக்குப் பெரிதும் ஆச்சரியம் விளைந்தது. பலபேர்வந்து கூடுமிடங்களில் எல்லாரும் எல்லா விஷயத்திலும் ஒத்த கருத்துடையா

யிருத்தல் சாத்தியமன்று. ஆனல் அவரவர்கொண்ட கருத்தை அவ ரவருள்ளத்துக்கொண்டுறினும் உபந்யாசங்களில் அங்ஙனம் மறு தலை வருதற்கில்லாத விஷயங்களையே பேசுதலும், மறுதலையுள்ள விஷயங்கள் பேசப்படினும் அதுபற்றி சபைகளில் பிறர் மறுத்துப் பேசிக் கலகம் விளையாதிருத்தலும் வித்துவான்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். எந்தச் சபையிலாவது இதுவரை எவ்விதகலகமும் விளைந்ததாக இல்லை.

காங்கிரஸ் சபை அமைதியுடைத்தென்றும், அதுபோல நமது சபைகள் அமைதிபெறவில்லை யென்றுங் கூறுவதை நோக்க மிகவும் வியப்புண்டாகின்றது. காங்கிரஸ் சபையில் ஒரு முறை ஒருவர் மீதொருவர் தடிக்கம்புகளை வீசியும், நாற்காலிகளைத் தூக்கிவீசியும், ஜோடு செருப்பு முதலியவைகளை யெடுத்து வீசியும் பெருங்கலகம் விளைந்து போலீஸாருக்கும் சிரமங்கொடுத்த விஷயம் நண்பர் நேரி லறியாவிடினும் பத்திரிகை வாயிலாக அறிந்திருத்தல் கூடுமே. அங்ஙனமாகவும் அதைப்புகழ்ந்தும் மிகவும் அமைதியுடன் நடை பெறும் நமது சபைகட்குவரும் புலவர்களைக்குறை கூறியும் நண்பர் எழுதத்துணிந்தது எக்காரணம் பற்றியோ அறியோம். இக்காங் கிரஸ் என்ன! பார்லிமெண்டு மகாசபையிலுங்கூட சிலவேளை யிப் படிப்பட்ட பெருங்கலகங்கள் வருவதுண்டென்பதை பத்திரிகாபி மானிகள் யாவருமே யுணர்வர்.

சபை முடிந்த பின்னர் வித்துவான்கள் பலர் ஒன்று கூடுங்கால் அவரவர் கொள்கைகளைப்பற்றி முரண்பாடுறுவதைக்காட்டி வாதித் துக்கொள்ளலாம். அது சபைக்குச் சம்பந்தமற்ற விஷயமேயாகும். அதுபற்றி நமது வித்துவான்கள் சபைகளில் ஒரு சிறிதும் தவறாக நடந்துகொண்டதாக இதுவரை யாம் கேட்டும் அறிந்திலம். பொதுவாக நம்மவரிற் பலர் அயல் நாட்டார் நடையுடை பாவனை களையே மிக மதித்தும், நம்மவர் குணங்களை அலட்சியம் செய்தும் வருகின்றனர். அது கூடாதென்பதும் அயலாரிடமுள்ள குணங்களை மட்டும் நாம் கிரகித்துக்கொண்டு நம்மவர்கொள்கைகளில் நல்லன வெல்லாவற்றையும் பாராட்டிவரவேண்டு மென்பதும் நமதபிப்பி ராயம்.

அன்றியும் சபைக்கு வருபவர்களிற் பலர் வெறும் புகழ்ச்சிக்கு ஆசைப்பட்டவர்களாய்த் தங்கட்குவேண்டியவர்களைக்கொண்டு தங்களை அளவிறந்து புகழச்சொல்லி மனமகிழுகிறார்கள். என்றும், பின்னர் அங்ஙனம் தம்மைப் புகழ்ந்தவர்களைத் தாம் அவரைவிட அதிகமாகப் புகழுகின்றார்கள் என்றும் செட்டியாரவர்கள் எழுதுகின்றார்கள்.

பிரசங்கத்துக்கு வருகிற வித்துவான்களில் ஒருவரைப் பற்றி மற்றொருவர் புகழ்ந்துபேசக்கூடிய சந்தர்ப்பம் நேர்ந்தால் அங்ஙனம் செய்வதுண்டென்பதிற் றடையில்லை. ஆனால் செட்டியாரவர்கள் எழுதியபடிமட்டும் இதுவரை நடைபெற்றிருப்பதில்லை. அதாவது தமக்குவேண்டியவர்களைக்கொண்டு தம்மைப் புகழச்சொல்கிறதாக இவர்கள் எழுதியது. இது சிறிதுந்தகாது. புகழ்ச்சி விரும்புவது ஒரு சிறந்த பெருங்குணமாகும். பிறர் தன்னைப்புகழவேண்டுமென்ற எண்ணமட்டும் உண்மையில் ஒருவன் கொள்வானாயின் அவன் தீமை
க்கு அஞ்சி நன்மைக்கு முற்படுவன். புகழ் பெறவேண்டுமென்பதே
புலவர்கள் கருத்தாகுமென்பதற்குப் பலபிரமாணங்கள் காட்டலாம்.
புகழடையவேண்டுவது ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான
கடமை. இப்படியிருக்க வித்துவான்கள் தகுதி நோக்கி அமயம்
வாய்த்தபோது ஒருவரை .யொருவர் வியந்து பாராட்டவேண்டு
வது அவசியமானதே. தவிரவும் நெடுந்தூரத்திலிருந்து காலச்
செலவையும் தேகசிரமத்தையும் பாராட்டாமல்வந்து அகாலவுணவு
அகால நித்திரையாதி அசௌகர்யங்களையும் சகித்துப் பிரசங்கிக்
கும் வித்துவான்கள் சபையாரிடம் என்ன பயனையடைகின்றார்கள்?
பிறர் மதிப்பாகிய புகழும் புண்ணியமுமே பயனாகக் கருதுவதன்றி
வேறில்லையே. அப்படியிருக்க ஒருவரை யொருவர் புகழ்ந்து பேசு
வதுங் கூடாதென்பது சரியானதன்றே· அவ்விஷயத்தில் அதிகநே
ரங் கழித்தல் கூடாதென்பதை நாம் மறுக்கவில்லை. அதிகநேரம்
அவ்விஷயத்தில் செலவிடுவதாகக் கண்டிலம்.

ஆனால் எந்த வித்துவானாவது தன்னைப் புகழும்படி பிறனொரு
வனுக்குச்சொல்லிவைத்துப் புகழச்செய்வானாயின் நண்பர் ஸ்ரீ சேவு
கன்செட்டியாரவர்கள் எழுதியவாறு அருவருக்கத் தக்கதேயாகும்.

இயற்கையில் ஒருவரை யொருவர் புகழ்ந்துகொள்வதால் தற்போது கல்வி கற்று வருபவர்கள் நாமுங்கற்றுச் சபையேறி யுபந்யசித்தால் நம்மையும் பலர் புகழ்ந்து உபசரிப்பார்கள் என்று கல்வி கற்றலில் ஒருவித ஊக்கங்கொள்ளற்கும் ஏதுவாகும்.

வித்துவான்கள் பண்டைக்காலத்திலும் புகழ் பெறுவதையே பொருள் பெறுவதினும் சிறப்பாகக் கொண்டிருந்தனரென்பது புறநானூறு முதலிய பழைய நூல்களாலும் மற்றும் பல சரித்திரங்களாலும் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. இனி புகழ் என்பதுதான் யாது?என விசாரிப்பாம்.ஒருவன் கல்வியாலும் அறச்செயல்களாலும், நற்குணங்களாலும் பிறரால் மதிக்கப்பெறுதலே புகழாகும். இவற்றால் பிறர் மதிக்க விரும்புகிறவன் அவ்வவற்றால் ஏனையரினும் சிறக்க விரும்புவன். அவ்விருப்பமானது அவனை மேலும் மேலும் நன்மையிற் செலுத்துமேயன்றித் தீமையிற் புகுத்தாது. இதனால் புகழ்ச்சி விருப்பினர் யாரும் நன்மையே செய்ய முற்படுவர் "வாயார வுண்டபேர் வாழ்த்துவது...எங்களுலக வாய்பாடு" என்பது பெரியார் திருவாக்கு. ஆதலின் ஒருவன் கல்வியறிவைக் கண்டு மன மகிழ்ந்தபோது அவனைப் புகழ்ந்து பேசும்படியான விருப்பமானது பிறர் மனத்தில் வருவதும் பேசுவதும் சகசமேயாகும். ஆதலின் இத்தகைய விஷயங்களைக் குறைவாகக்கொண்டு கூறல் சரியன்றே.

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

பத்திராதிபர்.

ஒரு குறிப்பு.

தைமீ பாநுவில் 213 ம் பக்கத்தில் வெளிப்பட்ட இரண்டு வெண்பாக்களின் ஆக்கியோரைப்பற்றி மாசிமீ பாநுவில் வந்த பிழைதிருத்தத்தைப்பார்த்தேன். அதுவுந்திருத்தற்பாலது.

"வைசியசிவாநந்த" என்னும் வெண்பா தைமீ பாநுவிற்பதித்தபடி ஸ்ரீ அ, கோபாலய்யரவர்கள் பாடியதேயாம். அதற்கடுத்த "தூண்டா விளக்காய்" என்னும் வெண்பா இயற்றியவர் ஸ்ரீ திரு, இராமசாமி ஐயங்கார் என்றிருப்பதை சொக்கலிங்கம் புதூர் மா. வா- வித்தியாசாலைத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ ரெ. இராமமூர்த்தி ஐயரவர்களென்று திருத்தல்வேண்டும். இதுயான்நேரிற்கண்டது

கண்டவன்

ஷெ வெண்பாக்களை யெழுதித்தந்தோர் ஆக்கியோர் பெயரை விளக்கமாக வெழுதாமையால் மாற்றிப் பதிப்பிடநேர்ந்ததற்கு விசனிக்கிறோம். ப—ர்.

397 7

உ

திருச்சிற்றம்பலம்.

"தருக்க சங்கிரகக் கண்ணாடி".

(1) பதார்த்தம் ௭.



(2)
உருவம் எ.

- வெண்மை
- கருமை
- பொன்மை
- செம்மை
- பசுமை
- புகைமை
- சித்திரம்

(3)
இரதம் சு

- தித்திப்பு
- புளிப்பு
- கார்ப்பு
- காழ்ப்பு
- கைப்பு
- துவர்ப்பு

(4)
கந்தம் உ.

- நறுநாற்றம்
- தீநாற்றம்

(5)
பரிசம் ந

- குளிர்ச்சி
- சூடு
- குளிர்ச்சியும் சூடுமில்லது

(6)
பரிமாணம் ச.

- நுண்மை
- பெருமை
- குறுமை
- நெடுமை

(7)
திரவத்துவம் உ.

- இயல்பு
- நிமித்தம்

(8)
சத்தம் உ
- ஒலிவடிவு
- எழுத்துவடிவு

(9)
புத்தி உ
- நினைவு க
- அனுபவம் உ
  - உண்மை ச
    - காட்சி — (அதன் கரணம்) காண்டல்
    - அனுமிதி — அனுமானம்
      - தன்பொருட்டு
      - பிறர்பொருட்டு
    - உபமிதி — உபமானம்
    - சாத்தம் — சத்தம்
  - இன்மை. ௩
    - ஐயம்
    - திரிவு
    - தருக்கம்

(10)
வாசனை ௩
- வேகம்
- பாவனை
- நிலைபெறுத்துகை

(11)
இலிங்கம் ௩.

- அந்நவய வெதிரேகி
- கேவலாந்நவயி
- கேவல வெதிரேகி

(12)
ஏதுப்போலி ௫.

- சவ்வியபிசாரம்
- விருத்தம்
- சற்பிரதி பக்கம்
- அசித்தம் ௩.
  - சார்பசித்தம்
  - உருவ சித்தம்
  - வியாப்பியத்தன்மை யசித்தம்
- பாதிதம்

மு. வடிவேல்,
தமிழ்ச் சங்கம் கலாசாலை. மதுரை.

401

மாஜிஸ்ரேட் மகம்மதாலி தோப்பின்வழியாக நான் நின்ற இடத்தை அணுகி வருவதைக் கண்டேன். ஆனாலவர் என்னோடாவது அம்மங்கையோடாவது எதும் வார்த்தையாடாமல், மிகுந்த வேகத்துடன் மாளிகையின் பின்புறத்திலுள்ள தோப்பின்வழியாக வெளியே நடந்து சென்றார். அவர் என்னை அந்தவிடத்தில் பார்த்துவிட்டே அவ்விதம் சென்றிருக்கவேண்டுமென்று நான் சந்தேகித்தேன். அவரால் என்னுடைய விருப்பத்திற்கு,—அந்த நங்கைமீது காதல்கொண்டு அவளை மணக்க வேண்டுமென்று கருதிய என்னுடைய விருப்பத்திற்கு,—எதாவது இடையூறு நேருமோ என்று நான் அஞ்சினேன். அவர் குலாம்காதிறுவினுடைய உறவினராயிருந்ததும், நானும் குலாம்காதிறுவும் விரோதபாவம் பாராட்டினோம் என்பதை அவர் அறிந்திருந்ததும், அவரும் மற்றொரு ஸ்திரீயும் அந்த மாளிகையில் பேசிக்கொண்டிருந்ததைக்கொண்டு அந்த ஸ்திரீயே அவ்வீட்டுக்குப் புதிதாய்க் குடிவந்தவளாயிருக்க வேண்டுமென்பதையும், அவளுக்கும் அவருக்கும் சிநேகபாவம் இருக்கக்கூடுமென்பதையும் ஒருவாறு நான் ஊகித்திருந்ததும், இன்னும் இவைபோன்ற சில காரணங்களும், நான் அந்தப்பெண்ணையும் அவளுடைய மறுவற்ற காதலையும் அடைவதற்கு இடையூறாக, மகம்மதாலி எதாவது சூழ்ச்சி செய்யக்கூடும் என்னும் சந்தேகத்தை என் மனத்தில் எழுப்பிவிட்டன. அவ்விதம் அவர் எதாவது இடையூறு இயற்றினால் யாது செய்வது என்னும் விஷயத்தைப்பற்றி ஆலோசித்துக்கொண்டே நான் என்னுடைய வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குப் போனவுடன் வேலைக்காரன் என்னை நோக்கி "எஜமானே! மாதுஸ்ரீ மோஹனாங்கி அம்மையவர்கள் தங்களை அரைமணி நேரத்திற்கு முன்பு இங்குவந்து விசாரித்தார்கள், நீங்கள் வெளியே சென்றிருக்கிறீர்கள் என்றும், இன்னும் வரவில்லை என்றும் சொன்னேன். அதிகாலையில் தங்களை அவர்கள் வீட்டுக்கு வரும்படி சொல்லிச்சென்றார்கள்" என்று கூறினான்.

மறுநாட்காலையில் மோஹனாங்கியைப்போய்ப் பார்ப்பதென்று நான் உடனே தீர்மானித்துவிட்டேன். எனெனில், அவளை விசாரித்தால் புதிதாய் அந்த மாளிகையில் குடிவந்திருப்பவர்கள் யார் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்ளக் கூடுமென்னும் நம்பிக்கை எனக்கிருந்தது.

மூன்றாமதிகாரமுடிந்தது.

நான்காம் அதிகாரம்.

மோகனாங்கியின் குணாதிசயம்.

"விண்டோட நிவந்தகோயில் வேந்தர்தம் வேந்தன்தன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயர் கோயினண்ணித்

தொண்டைவாய் மடந்தைமாரிற் சொல்லமற்றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்றமன்னாள் பிள்ளையைக் கொணர்கவென்றாள்"—
[கம்பராமாயணம்.]

நான் அதிகாலையில் மலைக்கோட்டைக்குச்சென்று மோகனாங்கியைச் சந்தித்தேன். அவள் அப்போது 'பத்மவிலாஸ'த்தில்,—'பத்மவிலாஸம் என்று மோஹனாங்கியின் மாளிகைக்குப் பெயர்,—வேறு இரண்டொரு ஸ்திரீகளுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். ஒரு ஜமீன்தாருடைய பௌத்திரியாகிய சாந்தை என்பவளும், விவாகமாகாத வயது முதிர்ந்த கன்னிகாஸ்திரீயாகிய வேதவதியும் அங்கிருந்த ஸ்திரீகளுள் முக்கியமானவர்களாவார்கள்.

"ஆத்மநாதரே! வரவேண்டும், வரவேண்டும்!" என்று என்னை நோக்கியவுடன் மோஹனாங்கி உபசாரங்கூறி, ஒரு நாற்காலியில் என்னை உட்காரும்படி குறிப்பித்துவிட்டு வைத்தியரே! கடைசியாகச் 'சரவணவிலாஸம்' வாடகைக்கு விடப்பட்டுப் போயிற்று. என்னுடைய நண்பரொருவர் அந்தமாளிகையை வாடகைக்குப்பேசி, அதில் குடிவந்திருக்கிறார், அவருடைய பெயர் சபாநாயகம் என்பது; அவருடைய மனைவி பெயர் சிவகாமியம்மை என்பது. சபாநாயகம்பேசும்போது, மிக இனிமையாக அவருடைய முகம்தோன்றும்;—ஆனால் அவர் அதிகமாகப் பேசமாட்டார்! சிவகாமி பேசுவதற்கு ஆரம்பித்தால், அவளுடைய முகம் மிகக் கோரமாகத்தோன்றும்,—ஆனால் அவள் இடைவிடாமல்பேசுவாள்! அவளும் நானும் பாலிய சிநேகிதர்கள்; அவளுக்கும் எனக்கும்ஒரே வருஷத்திற்றான் விவாகம் நடந்தது! ஒருவருஷம் அவளும் நானும்உறையூரில் வசித்து வந்தோம்! ஆனால் ஆத்மநாதரே நட்புவிசாலமாயும் வாழ்நாள் குறுகியதாயும்இருக்கின்றன! அவளை விட்டு நான் பிரியும்படி நேரிட்டது. என்னுடைய புத்திரியாகிய விசாலாட்சியும், அவளுடைய புத்திரியும் உடலும் உயிரும்போல் ஒருவரையொருவர் நேசித்து வந்தார்கள்" என்று மீண்டும் உரைத்தாள்.

மோஹனாங்கியின் வாய் மொழியினால் 'சரவண விலாஸம்' என்பது முன் குலாம் காதிறு வசித்து வந்ததும், பிறகு ஒரு கனவானால் விலைக்கு வாங்கப்பெற்றதுமான மாளிகையின் பெயர் என்பதை நான் அறிந்துகொண்டேன். அந்த மாளிகைக்குப் புதிதாய்க் குடிவந்திருப்பவர் பெயர் சபாநாயகம் என்பதையும் அவருடைய மனைவி பெயர் சிவகாமி என்பதையும், அவர்களுக்கு ஒரு புத்திரி உண்டு என்பதையும் மோஹனாங்கி மூலமாய் நான் அறியலானேன். அன்று அந்த மாளிகையில் மகமதாலியோடு பேசிக்கொண்டிருந்தவள் சிவகாமியாயிருக்கக் கூடுமோ வென்றும், மாளிகையின் பின்புறமுள்ள தென்னந் தோ

ப்பில் உட்கார்ந்திருந்தவளும் என் மனதைக் கொள்ளை கொண்டவளுமான பெண்மணி அவளுடைய புத்திரியாயிருக்கக் கூடுமோ வென்றும் ஒரு சந்தேகம் என் மனத்தில் உதித்தது.

"உறையூர்க் கிராமம் சபாநாயகத்தின் ஜீவியதசைக்குப் பிறகு அவருடைய புத்திரியைத் தான் சேருமோ?" என்று சாந்தை என்பவள் மோஹனாங்கியை ஆவலோடுவினவினாள். ஏனெனில் அவளுக்கு ஒரு புத்திரன்,—இன்னமும் விவாகம் செய்யப்படாதவன்,—இருந்தான்!

"இல்லை; அவளைச் சேராது! அந்த ஆஸ்தியை அடைவதற்கு ஆண் வார்சு இருக்கிறது. சபாநாயகத்தின் சகோதரர் ஒருவர் இருந்தார். வச்சிரபாணி என்னும் பெயருடைய ஒரு புத்திரனை விட்டு விட்டு அவர் இறந்துபோனார். அந்தப்புத்திரனுக்குப் போதிய வயது இன்னும் வரவில்லை. அவனுக்குக்கார்டியனாக சபாநாயகம் இருந்து வருகிறார். தகுந்த வயது வச்சிரபாணிக்கு வந்தவுடன் உறையூர்க்கிராமத்தில் பெரும் பாகம் அவனைச் சேரும். ஆனால் சிறுபாகத்திற்குச் சிவகாமியின் புத்திரியே உரியவளாவாள்" என்று மோஹனாங்கி சாந்தைக்குப் பதில் கூறினாள்.

நாங்கள் எல்லோரும் சிறிது நேரம் வரையில் பொதுவிஷயங்களைக் குறித்து வேடிக்கையாக வார்த்தையாடிக் கொண்டிருந்தோம். அதன் பிறகு அங்கிருந்த ஸ்திரீகள் எல்லோரும் மோஹனாங்கியிடம் விடைபெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்றார்கள். நானும் மோஹனாங்கியும் மாத்திரம் தனியாக இருந்தோம்.

மோஹனாங்கி திருச்சியில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் வாய்ந்த ஸ்திரீ என்றும், எல்லோரையும் தன் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கும்படி செய்வதில் விருப்பமுடையவள் என்றும், இவள் கணவன் சைனியத்தில் தளகர்த்தனாயிருந்து இப்போது உபகாரச் சம்பளம் பெறுபவன் என்றும் முன்னமே கூறியிருக்கின்றேன். ஆனாலும் இவளைப்பற்றி இன்னும் சிறிது விஸ்தாரமாகக் கூறவேண்டுவது அவசியமாகிறது.

மோஹனாங்கி சாதாரண ஸ்திரீகளைவிட உயரமாயும் பருமனாயு மிருந்தாள். அவளுக்கு வயது நாற்பதிற்கு மேல் இராது. கரிய நிறமும், கம்பீரமான தோற்றமும், அகன்று பரந்த முகமும், அதிகார தோரணையைக் காட்டும் குரலும் பிடிவாதமும் தைரியமும் ஒருங்கமைந்த மனமும், இரக்கமின்மையையும் அன்பையும் மாறி மாறி தோற்றுவிக்கும் பார்வையு முடையவள்.

"ஆத்மநாதரே! நான் உம்மைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீரோ வேறொரு ஸ்திரீயைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறீர். ஆ!

நீர் நன்றியற்ற மனிதர்!'' என்று திடீரென்று மோஹநாங்கி என்னை நோக்கிக் கூறினார்.

''நீங்கள் கூறுவது சரியன்று. நான் உங்களைப்பற்றியே இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன்''என்று கொஞ்சஞ் சிரித்துக்கொண்டே பதில் கூறினேன்.

''அப்படியா! ஆனால், யாரைக்குறித்து நீர் என்னை நினைத்தீர்? நாற்பது வயதிற்கும் இருபத்துநான்கு வயதிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள வித்தியாசம் சிறிதன்று, வேதவதி எனக்கு ஐந்து வருஷத்திற்கு இளையவள். ஆதலால் எங்கள் இருவரையும் நீர் நினைப்பதற்கு நியாயமில்லை. ஆகவே வேறொரு பெண்மணியைப் பற்றியே நீர் சிந்தித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். என்னைப்பற்றி நீர்நினைத்திருந்தாலும், அது அப்பெண்மணியின் சம்பந்தமாகவே இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.'' என்று மோஹநாங்கி உரக்கக் கூறி ''ஆத்மநாதரே! நீர் காதல் நோயால் வருந்துகின்றீர்'' என்று அதிரகசியமாக மீண்டும் என்காதிற்குள் உரைத்தார்.

''இவ்விதம் நீங்கள் நினைப்பதற்குக் காரணம் யாது?'' என்றுநான் உசாவினேன்.

''அவ்விதம் நினைப்பதற்குரிய குணங் குறிகள் உம்மிடம் வியக்தமாய்க் காணப்படுகின்றன. உம்முடைய நடையுடை பாவனைகள் மாறியிருக்கின்றன. முன் நான் உம்மைப் பார்த்தபோது காணப்படாத சில வேறுபாடுகள் இப்போது உம்முடைய முகத்தில் காணப்படுகின்றன. அமைதியோடும் ஸ்திரபுத்தியோடும் இருக்கும் நீர், இப்போது அமைதியற்றவராயும் ஸ்திரபுத்தியற்றவாாயும் இருப்பதற்குக் காரணம் என்ன? கம்பீரமாயும் சந்தோஷகாமாயும் எப்போதும் காணப்படும் உம்முடைய முகம்; தாழ்மையோடும் கவலைக்குறியோடும் காணப்படுவதற்கு முகாந்திரம் யாது?'' என்று மோஹநாங்கி வினவினாள்.

அவள் இவவிதம் கேட்டவுடன் நான் ஏதும் தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றேன். திடீரென்றுண்டான மனக்கலக்கத்தை மறைக்க நான் முயன்றும், அம்முயற்சி பயன்படாமையால் வெறும் புன்னகையால் அவளுக்குப் பதில் கூறவேண்டியவனானேன்.

''எப்போது காதல்நோய் என்னைப்பற்றியது? யாரால்பற்றியது? என்று நான் வினவினேன்.

''எப்போதென்பதைவும் யாரையென்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல என்னால் முடியாவிட்டாலும், நீர் காதல் வசப்பட்டிருக்கின்றீர். என்று உறுதியாய்க்கூற என்னால் முடியும். வைத்தியரே! காதலோடு செய்யப்பட்டபோதி

னும் சரியே, அல்லது காதலில்லாமற் செய்யப்பட்டபோதிலும் சரியே!—விவாகம் என்பது ஆராய்ந்து செய்யப்படவேண்டிய ஒரு முக்கியமான விஷயமாகும். ஆதலால் ஜாக்கிரதையாக இரும்'' என்று மோஹனாங்கி கூறி, "என்னுடையபுத்திரி விசாலாட்சிக்கு இன்னும் நான் விவாகம் செய்யாமலிருப்பதற்குக் காரணம், சாமானிய ஏழையாயிருந்தபோதிலும் யோக்கியமுள்ளவனாயும் நற்குணமுடையவனாயுமுள்ள ஒருவனைக் கணவனாக அவளுக்குத் தேடவேண்டும் என்னும் விருப்பந்தான். ஆத்மநாதரே! நீர்தான் என்னுடைய புதல்வியைப் பார்த்திருக்கின்றீரே? அவளைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?'' என்று மீண்டும் வினவினாள்.

"விசாலாட்சி நற்குணமுடையவள் என்பதை மறுப்பதற்கு என்னால் முடியாது. அழகுள்ளவள் என்பதை அங்கீகரிக்காமலிருக்கவும் என்னால் முடியாது'' என்று நான் பதில் சொன்னேன்.

மோஹனாங்கியின் கேள்வியிலிருந்து, அவளுடைய புத்திரியை நான் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்னும் எண்ணம் அவளுக்கிருக்கக்கூடுமென்று நான் ஒருவாறு ஊகித்தறிந்தேன்.

"விசாலாட்சியை நான் பார்த்துப் பலதினங்களாகின்றனவே? அவள் எங்கே? வீட்டில் இல்லையோ?'' என்று நான் மோஹனாங்கியை வினவினேன்.

"இல்லை; அவள் சபாநாயகம் வீட்டிற்குப் போயிருப்பாள்'' என்று மோஹனாங்கி பதிலுரைத்தாள்.

"ஓ! அப்படியா? விசாலாட்சியும் சபாநாயகத்தின் புத்திரியும் ஒருவரையொருவர் மிகுந்த அன்புடன் நேசிக்கிறார்கள் என்று சற்று முன்பு கூறினீர்களே? அதை நான் மறந்து விட்டேன். சபாநாயகத்தின் புத்திரி எப்படிப்பட்டவள்?'' என்று நான் அலட்சியமாய்க் கேட்டேன். ஆனாலும் என்னுடைய அந்தரங்கக் கருத்தை மோஹனாங்கி அறிந்து கொள்ளாமலில்லை.

"ஓ! காந்திமதி, ஆச்சரியப்படத்தக்க தேகக்கட்டும், வியக்கத்தக்க பேரழகும் இனிது வாய்ந்தவளே யாவாள். ஆனாலும், அவளுடைய மனப்போக்கு ஒரு விதமான பிறழ்வடைந்திருக்கிறது. அவளுடைய பேச்சும் செயலும் பித்தம் பிடித்தவர்களின் பேச்சையும் செயலையும் பெரும்பாலும் ஒத்திருக்கும். இந்த உலகத்தை அடியோடு மறந்தவள் போலும், வேறொரு பிரபஞ்சத்தில் வசிப்பவள் போலும் அவள் சிற்சில சமயங்களில் காணப்படுவாள். அவள் ஏதோ வியாதியால் வருந்துவதாகவும், தகுந்த வைத்தியர் ஒருவரை அனுப்ப வேண்டுமென்பதாகவும் சிவகாமி அதிகாலையில் எனக்குச் சொல்லியனுப்பி

யிருக்கிருள். வியாதியால் வருந்தும் காந்திமதியைப் பார்ப்பதற்காகவே விசாலாட்சி 'சரவணவிலாஸ்'த்திற்குப் போயிருப்பாள்'' என்று மோஹனாங்கி சொன்னாள்.

''காந்திமதி நோயினால் வருந்துகிருள்'' என்று மோஹனாங்கி சொன்னவுடன், என்னை யறியாமலே ஒருவிதமான மாறுதல் என் மனத்திலுண்டாகி, அது முகத்திலும் பிரதிபலித்தது. என்னுடைய முகத்திலும் பேச்சிலும் எற்பட்ட மாறுதலைக்கண்டவுடன் மோஹனாங்தி தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டாள். என்? அதிகம் சொல்லுவானேன்? என் அடிவாரத்திலிருந்த அதிரகசியம் யாதென்பதை அவள் அறிந்துகொண்டாள் என்பதை நான் கண்டுகொண்டேன்.

ஆ! இரகசியம்! அதை நான் என்னென்றுரைப்பது? இதற்கு முன் ஒருபோதும் கண்டிராததும், எவ்விதமான சம்பந்தமும் இதுவரையில் என்னோடு பெற்றிராததுமான ஒரு முகத்தை,—ஆண், பெண் என்னும் இருவகைப்பட்ட அமைப்பினுள் பின் வகையினைச் சார்ந்த ஒரு முகத்தை,—முதல் முதல் சர்வ சாதாரணமாக நான் பார்த்தவுடனேயே, இதுவரையில் நான் கொண்டிருந்த கொள்கைகளும் எண்ணியிருந்த எண்ணங்களும் நிலை பிறழ்ந்தன வென்றால், அதன் ஆற்றலை நான் எவ்வாறு புகழ்வேன்? அவ்வளவு சக்தி ஒரு பெண்ணுக்கு எவ்விதம் வாய்த்தது? அவளை நான் முன்னறியேன்,—அவளுடைய மனம் எத்தகைய தென்பதையும், அவளுடைய குணாதிசயங்கள் எப்படிப்பட்டவை என்பதையும் நான் ஒரு சிறிதும் அறிந்திலேன். அவ்வித மிருந்தும் 'நோயால் வருந்துகிருள்' என்னும் இரண்டு வார்த்தைகள் என் செவியில் நுழைந்தவுடன் என் மனம் அச்சத்தையும் அனுதாபத்தையும் ஒருங்கே கொண்டதாய் அலைகடலி லகப்பட்ட துரும்புபோல் சலனமடையக் காரணம் யாது? அந்த இரகசியந்தான் காரணம்! மோகனாங்கி அதை அறிந்து கொண்ட பிறகு அவளிடம் நான் மறைத்துப் பேசுவதாற் பயனென்னை? 'நான் 'காதல்' என்னும் பேய் பிடித்தாடுகின்றேன்' என்று மோகனாங்கி கருதியது உண்மையே! உலகத்தில் மனிதர்கள் எல்லோரும் ஒருகாலம் இல்லாவிட்டால் ஒரு காலத்தில் காதலுக்கு அடிமையாகிருர்கள். ஆனால், அமைதியோடும், சாந்தத்தோடும் சிலரிடம் மெதுவாக இந்தக் காதல் வந்திறங்குகிறது. இன்னும் சிலரிடம் கழுகு தன் இரைமீது திடீரென்று பாய்ந்து பிடிப்பதுபோல், மிகுந்த வேகத்தோடும் ஆற்றலோடும் வந்து பாய்கிறது. ஆனால் நான் காதலித்ததைப்போல் இந்த உலகத்தில் எந்த மனிதனும் ஒரு ஸ்திரீயை அவ்வளவு ஆர்வத்தோடு காதலித்திருக்க மாட்டான் என்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்.

காந்திமதி நோயினால் வருந்துகின்ருள் என்னும் செய்தியைக் கேட்டு நான் மனங்கலங்கினவனாய்ப் பலவிதமான ஆலோசனையில் ஆழ்ந்திருந்த சமய

எழுத முன்வந்தும் "ஆம்பல் முகம்" "மதிவாய்" என்று பிறழப் பிரயோகி த்துப் பாஷைக்குக் கேடு சூழ்வதோடு அமையாது,—பண்டிதர் என்றும், தங்களுக்குத் தாங்களே ஆரவாரமான பட்டங்களைச் சூடிக்கொண்டு மனமகி ழும் போலிவேடதாரிகள் பலர் இக்காலத்தில்இருக்கின்றார்களன்றோ? இவர்க ளுடைய வகுப்பைச் சேர்ந்தவர் தான் வைத்தியம்குலாம்காதிறு என்பவர்.

சிவப்பிரகாசத்துடன் இருந்தபோதும், அவர் தேசயாத்திரைசென்றபின்பு ஆறுமாதமும் நான், ஏற்கனவே எந்தக்கட்டிடத்தில் அவர் வைத்தியசாலை ஸ்தா பித்திருந்தாரோ, அந்தக் கட்டிடத்திலேயே வசித்து வந்தேன். ஆனால், இதற் குள் என்னுடைய பிரக்யாதி எங்கும் பரவிவிட்டபடியால், நோயாளிகள் சிகித் சைக்காகப் பிரதிதினமும் நூற்றுக்கணக்காய் வர ஆரம்பித்தார்கள். ஆதலால் நகருக்கு நடுவே பஹிரங்கமான இடத்திலிருக்கக்கூடியதும் விசாலமுடைய துமான வேறொரு கட்டிடத்திற்கு நான் குடிபோகும் படியாய் நேர்ந்தது. இவ்விஷயமாய் நான் பலரிடம் சொல்லியிருந்தேன்.

ஒருநாள் வேதவதி என்னும் வயது முதிர்ந்த கன்னிகா ஸ்திரீ என்னிடம் வந்து "வைத்தியரே! ஒருமாளிகை காலியாயிருக்கிறது. அதை நீங்கள் நேரில் வந்து பாருங்கள்" என்று கூறினாள்.

உடனே நான் அவளுடன் சென்று அந்த மாளிகையைப் பார்த்தேன். அது ஒரு பெரிய அரண்மனைபோல் இருந்தது.

நான் வேதவதியை நோக்கி "அம்மா! இந்த வீடு மிக அழகாயும் வசதி யாயுமே இருக்கிறது. ஆனால், எனக்கோ இன்னும் விவாகம் ஆகவில்லை; எனக்குரிய உள்ளூர் உறவினர்களுள் எவரும் இவ்வூரில் இல்லை. ஒரு மனித னுக்கு இவ்வளவு பெரிய வீடு அவசியமென்று, எனக்குத் தோன்றவில்லை" என்று சொன்னேன்.

"ஐயா! ஒரு மனிதன் வசிப்பதற்கு இவ்வளவு பெரிய வீடு வேண்டுவ தில்லை. என்று நீங்கள் கூறுவது உண்மையே, ஆனாலும் சிறந்த அழகும், தகுந்த வயதும், உயர்ந்த பதவியும் ஒருங்கு வாய்ந்துள்ள நீங்கள், நெடுநாளைக் குத் தனியாக இருக்கும்படி நேராது என்றே நான் நினைக்கிறேன்" என்று வேதவதி புன்சிரிப்போடு புகன்றாள்.

"இருக்கட்டும்; இவ்விஷயமாய் ஆலோசனை செய்து பிறகு தெரிவிக் கிறேன்" என்று நான் வேதவதிக்கு விடைபகர்ந்துவிட்டு அந்த மாளிகையி லிருந்து நீங்கினேன்.

இரண்டு மூன்று தினங்கள் கழிந்தன. நான்காம் நாள் அந்த மாளிகையைக் குலாம்காதிறு வாடகைக்குப் பிடித்துவிட்டார் என்றும், அந்த வீட்டில் அவர் தம்முடைய குடும்பத்தாருடன் வசிக்கப்போகிறார் என்றும், நான் அறிந்தேன். இவ்விஷயம் எனக்குப் பேராச்சிரியத்தை விளைவித்தது. இச்சம்பவம் நிகழ்ந்ததற்குக் காரணம் யாதென விசாரித்ததில், மோஹனாங்கி செய்த சூழ்ச்சியே காரணம் என்பது புலப்பட்டது. மோஹனாங்கி என்பவள் திருச்சியில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் வாய்ந்த ஒரு ஸ்திரீயாவாள். எல்லோரையும் தன்னுடைய விருப்பத்திற்கு இணங்கியும், அதிகாரத்திற்கு உட்பட்டும் நடக்கும்படி செய்வதில் இவள் சாமர்த்தியம் நிகரறக் கொண்டவள். பல வருஷம் சைனியத்தில் தளகர்த்தனாயிருந்து இப்போது உபகாரச்சம்பளம் பெறுகிறவனும், அஞ்சா நெஞ்சம் படைத்த மகாவீரனுமான இவளுடைய கணவன், இவளுடைய அதிகாரத்திற்கு உட்பட்டும் ஆக்கினைக்குப் பயந்தும் நடப்பவனென்றால், மற்றவர்களைப் பற்றிக் கூறுவானேன்?

நான் எவ்விஷயத்திலும் சுதந்தரமும் சுயேச்சையும் பாராட்டுவதில் விருப்பமுடையவன். பிறருக்கு அடங்கி நடப்பது என்னுடைய சுபாவமன்று. மோஹனாங்கி தன்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்டு நான் நடக்கவேண்டுமென்று விரும்பினாள். ஆனால் நானோ அவளை என்னுடைய அதிகாரத்திற்கு உட்படுத்த முயன்றேன். இதனால் எங்கள் இருவருக்குள்ளும் ஒருவகையான விரோதபாவம் ஏற்பட்டது. ஆனால், மோஹனாங்கி மிகுந்த செல்வாக்குடையவளாதலாலும், பிறரைத் தன் விருப்பப்படி நடக்கும்படி செய்வதில் சாமர்த்தியமுடையவளாதலாலும், என்னிடம் இனி வைத்தியம் பார்த்துக்கொள்ளக் கூடாதென்றும், குலாம்காதிறு விடமே எல்லோரும வைத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்றும் ஜனங்களுக்குப் போதித்து அவர்களைத் தன் வழியில் திருப்பிவிட்டாள். இதனால், என்னுடைய தொழிலுக்குப் போட்டியாகத் தொழில் நடத்தும் மகமதிய வைத்தியருக்கு அதிகமான வருவாயும், மிகுதியான புகழும் உண்டாகத் தலைப்பட்டன. ஆனால், குலாம்காதிறுவின் வெற்றியினால் எனக்கு வருத்தமாவது பொறாமையாவது உண்டாகவில்லை. அவருடைய தொழில் விருத்தியால் என்னுடைய தொழிலுக்கு இடையூறுவது, என்னுடைய புகழுக்குப் பங்கமாவது உண்மையில் விளையவில்லை. வைத்திய சாஸ்திர விஷயத்தில் அவருடைய கொள்கைகள் என்னுடைய கொள்கைகளுடன் பெரிதும் மாறுபட்டன. மதவிஷயத்திலும், தத்துவ சாஸ்திர விஷயத்திலும் இவ்விதமே அபிப்பிராயபேதம் எங்களுக்குள் ஏற்பட்டிருந்தது.

வீரகேசரி :—இருக்கட்டும் அப்படியே யிருந்தாலுமதை ஒரு பெரிய காரியமென்றெண்ணி சக்ரவர்த்தியிடஞ் சொல்வானேன்? நம்மிடத்தில் சொல்லியிருந்தால் நாமவளிஷ்டப்படி விவாகத்தை முடித்து வைத்திருக்கலாமே. இதற்கு சக்ரவர்த்தியிடம் வருவானேன்?

மங்கையர்க்கரசி :—உன்னிடத்திற் சொன்னால் அவள் கோரிய எண்ணம் நடைபெறுமோ என்ற சந்தேகத்தினாலுன்னிடஞ் சொல்லவில்லை யென்று தோன்றுகிறது.

வீரகேசரி :—ஏன் என்னால் முடியாதா அவள் விவாகத்தை நடத்திவைக்க?

மங்கையர்க்கரசி :—அவள் கோருகிற நாயகனவளை நாயகியாக நேசிக்கவில்லையாம். ஆகையால் அவர் அவளை மணஞ்செய்யமாட்டாரென்று ஒரு சந்தேகம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால்தான் சக்ரவர்த்தியிடஞ்சொல்லியவரை விவாகத்திற்கு சம்மதிக்கும்படி செய்யவேண்டுமென்றிங்கு வந்திருக்கிறாள்.

வீரகேசரி :—என்ன எல்லாமிக்க ஆச்சரியமாகவே யிருக்கின்றன! கமலினி ஒரு நாயகனை விரும்புகிறாளாம்! அவனவளை நாயகியாக நேசிக்கவில்லையாம்! இதென்ன புதுமை! அவள் விரும்புமநாயகன் அவளை விரும்பாமலிருப்பதற்குக் காரணமுண்டோ? அவளுடைய அழகையும் குணங்களையுங் கவனித்தால் அவளைத் தன் மனைவியாக அடையும் பாக்கிய முள்ளவனதிக புண்ணியஞ்செய்தவனாயிருக்கவேண்டுமென்றே நினைக்கிறேன். அப்படியிருக்க அவள் விரும்பியும் அவன் விரும்பாமலிருப்பதற்கு காரணமென்ன?

மங்கையர்க்கரசி :—இவ்வளவெல்லாஞ் சொல்லுகிறாயே. நீ அவளை மணஞ்செய்து கொள்கிறாயா?

வீரகேசரி :—சிவ, சிவ அம்மா என்னவார்த்தை பேசுகிறீர்கள் இவ்வளவு தகாத வார்த்தை உங்கள் வாயிலிருந்து வரலாமோ? என் சகோதரியை நான் மணஞ்செய்து கொள்ளவாவது?

மங்கையர்க்கரசி :—நீயவளை யவ்வளவு புகழ்ந்து பேசினையே யென்று சொன்னேன். அதற்கிவ்வளவு கோபமா?

வீரகேசரி :—கோபமொன்றுமில்லையம்மா. அஃதிருக்கட்டும் அதற்கு சக்ரவர்த்தி யென்ன உத்தரவு கொடுத்தார்களாம்?

மங்கையர்க்கரசி :—அந்நாயகனவளை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவள் கோரியபடி விவாகத்தை நடத்தி வைப்பதாக வாக்களித்திருக்கிறார்கள்.

வீரகேசரி:—கமலினி விரும்புகிறது அந்நாயகனுக்கொரு வேளை தெரியாமலிருக்கலாம். தெரிந்தாலவனும் நேசியாமலெங்கே போவான்? ஆனலொருவேளை அவன் விரும்பாமலே யிருந்துவிட்டால் கமலினிக்கவ்விவாகத்தால் துன்பமேற்படுமே.

மங்கையர்க்கரசி:—அது விஷயமாயவள் கவனித்துக்கொள்வாளாம்.

வீரகேசரி:—வெகு சமர்த்தி சரிதான் இப்பொழுது தெரிந்தது. அவள் விவாக விஷயமாய் நம்முடைய சம்மதத்தை யறியும் பொருட்டு சக்ரவர்த்தி நம்மை யிங்கு வரவழைத்தார்களோ?

மங்கையர்க்கரசி:—ஆம் அதற்காகத்தான் நம்மை வரவழைத்தது. சக்ரவர்த்தி யது விஷயமாய் என்னைக்கேட்டார்கள் எனக்கு சம்மதமென்று சொல்லிவிட்டேன். உன் சம்மதமென்ன?

வீரகேசரி:—அவள் கோருகிற நாயகன் யாரென்று தெரியாமலென் சம்மதமென்னென்று சொல்வது? இருந்தாலு முங்களுக்குச் சம்மதமானலெனக்குஞ் சம்மதந்தான்.

மங்கையர்க்கரசி:—நிச்சயந்தானு? உறுதியாய்ச்சொல்.

வீரகேசரி:—நிச்சயந்தான் நாம் கோருவதவளுடைய நன்மையையே யாதலாலவ்விவாகத்தில் தங்களுக்குச் சம்மதமானலெனக்கென்ன ஆக்ஷேபணை யிருக்கிறது? அவளுக்கேதேனுங் கெடுதி யேற்படுவதாயிருந்தால் நீங்கள்தான் சம்மதிப்பீர்களா?

மங்கையர்க்கரசி:—ஆனலுனக்குஞ் சம்மதந்தானென்று சக்ரவர்த்தியிடஞ் சொல்லிவிடலாமல்லவா?

வீரகேசரி:—அப்படியே சொல்லுங்கள் அதற்கென்ன தடையிருக்கிறது? ஆனலவள் விரும்புகிற நாயகன் யாரென்றென்னிடஞ் சொல்லக்கூடாதா?

மங்கையர்க்கரசி:—ஏன் சொல்லக்கூடாது?

வீரகேசரி:—யாரம்மா அது?

மங்கையர்க்கரசி:—அவள் விரும்புகிற நாயகனு.

வீரகேசரி:—யாரது? எனக்குத் தெரிந்தவர்தானே?

மங்கையர்க்கரசி:—ஏன் தெரியாது? உன்னை யுனக்குத்தெரியாவிட்டா லந்நாயகனையுமுனக்குத் தெரியாமலிருக்கலாம்.

வீரகேசரி:—நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே.

மங்கையர்க்கரசி:—தெரியும்படி சொல்கிறேன். அவள் கோருகிற நாயகன் நீதான்.

411

குலாம்காதிறு "கடவுள் ஒருவர் உண்டு" என்று கொள்ளும் ஆஸ்திக சமயத்தினராவர். நானோ "கடவுள் இல்லை" என்று வாதிக்கும் நாஸ்திக மதத்தினன். "நமக்கு வாய்த்துள்ள அறிவு இவ்வுலகத்தையும் இவ்வுலக இயற்கையும் பற்றியதுதான். இயற்கையின் போதனையிலிருந்து நாம் ஆலோசனை செய்து யுக்திக்கும் அனுபவத்திற்கும் இயைந்த முடிவுக்கு வருவதே தத்துவ சாஸ்திரம்" என்பது என்னுடைய கொள்கையாகும். "மதம்" என்பது, மூடத்தனமான நம்பிக்கைக்கு ஏற்ற விஷயமேயன்றி தத்துவ ஆராய்ச்சிக்கு ஏற்ற விஷயமன்று என்பது என்னுடைய சித்தாந்தமாகும். சரீரம், மனம், ஆன்மா ஆகிய இம்மூன்றுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பது குலாம்காதிறுவின் கொள்கையாகும். "மனம்" என்னும் வார்த்தையும் "ஆன்மா" என்னும் சொல்லும் எனக்கு ஏற்ற பதங்களல்ல. காணப்படுகின்ற உலகம் காணப்படுகின்ற சரீரமாகிய இவை இரண்டுமே உண்மை. மற்றவை உண்மையல்ல" என்பது என்னுடைய தேர்ந்த அபிப்பிராயம்.

முதலதிகாரம் முடிந்தது.

இரண்டாம் அதிகாரம்.

வசந்தகால சந்திரன்.

"ஆரழ மாரச் சேறு மரும்பனி நீரும் பூவு
மீரவெண் மதிநி லாவு மின்னிளந் தென்றற் காலு
மோருயி ரிரண்டு மெய்யா யுருகுவா ருருகும் வண்ண
மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்,"—வில்லிபாரதம்.

இவ்வுலகத்தில் மனிதர்களுக்கு வாழ்வு சிலகாலம் தாழ்வு சிலகாலம் என்னும் உண்மையை யறிவிக்கப் புகுந்தவன்போல், சூரியன் காலையிலிருந்து நண்பகல்வரையும் கீழ்த்திசையிலிருந்து மேலேறியும், அதன்பின் ஆகாயத்தின் உச்சியிலிருந்து மேற்றிசைநோக்கிக் கீழிறங்கியும் பையப் பையச்சென்று இறுதியில் மேலைச் சமுத்திரத்தில் மறைந்தான். வெண்மதியாகிய இளமங்கை ஆதித்தனின் பிரிவாற்றுமையால் வருந்தும் நிலமகளுக்குத் தேறுதல்கூறப் புறப்பட்டவளைப்போல், உடுக்கணங்களாகிய தோழியருடன் ஆகாயத்தில் தோன்றினள், அவளுடைய அழகிய தோற்றத்தாலும் அவளுடைய புன்முறுவலாகிய நிலவொளியாலும் பார்மகள் துயரவிருள்நீங்கி, வசீகரத்துடனும் உற்சாகத்துடனும், பொலிந்தாள். பொதியமலைத் தென்றல் நறுமணம்பொதிந்தஇளங்காற்றைக்கொண்டு பூமாதேவியின் ஆயாசத்தைத் தீர்த்தது. குளிர்ச்சியான பச்சிலைகளை நெருங்கக்கொண்ட வான் தோய் மரங்கள் தலையசைத்துத் தண்ம

தியை வரவேற்றன. மல்லிகை, முல்லை, ரோஜா, செவந்தியாதியநறுமலர்கள் செடிகளில் நிறைந்தும் மலர்ந்தும் காணப்பட்டமை கட்புலனுக்கு இன்பத்தையும், அவற்றின் சுகந்தம் மணமறியும் இந்திரியத்துக்குச் சுகத்தையும் கொடுத்தன. மணிக்கூண்டில் அமைக்கப்பட்டுள்ள கடிகாரம் ஏழுமணி அடித்தது. பழங்களையும், காய்கறிகளையும், புஷ்பவகைகளையும் சுற்றுப்புறங்களிலுள்ளகிராமங்களிலிருந்து கொண்டுவந்து விற்பனைசெய்த அங்காடிக்காரிகள், நகரிலிருந்து மீண்டும் புறப்பட்டுத் தங்கள் தங்கள் கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். சந்திரனுடைய கதிர்கள் பாய்வதால் உருக்கிவார்த்தவெள்ளியைப் போல் தோன்றிய காவிரியாற்றுஜலம், அமைதியுடன் ஓடிக்கொண்டிருந்தது. வேதவழிப்பட்ட அந்தணர்கள் காவிரியாற்றில்தங்கள் மாலைக்கடனைமகிழ்வுடன் செய்துகொண்டிருந்தார்கள். அன்று திரிசிரபுரம் ஒருவகையான வசீகரத்தோற்றத்துடனேயே விளங்கிற்று.

குலாம்காதிருக்கு மோஹனாங்கியின் உதவியால், வைத்தியத் தொழில் பிரபலமானவுடன், அவர் அந்தக் கீர்த்தியுடன் திருப்தியடைய மனமற்றவராய் உலகை வேறு வழிகளில் வஞ்சிக்க ஆரம்பித்தார். மனிதர்களில் பெரும்பாலார்க்கு வாய்க்காத பல தெய்வீக சக்திகளும், அமானுஷிகமான ஆற்றல்களும் தமக்கு இருப்பதாக உலகத்தாருக்குக் கூறினார். கூறினதோடு மட்டும் அமையாது, ஜனங்களிற் பெரும் பாலரை நம்பும்படியும் செய்தார். மனோவசியம், ஆத்மக்காட்சி, யோகப்பார்வை, பிர்மஞானம், தொலைவிலுணர்தல் என்னும் இவை போன்ற பல பதங்களைப் பிரயோகித்துப் பகிரங்கத்தில் பேசுவது குலாம் காதிருவின் வழக்கமாகும்.

"மனிதனிடத்தில் மூன்று பதார்த்தங்கள் பொருந்தி யிருக்கின்றன. அவையாவன:—(1) கட்புலனுக்குத் தோன்றுவதும், மெய், வாய், கண், மூக்கு, செவியாதிய பஞ்சேந்திரியங்களை யுடையதுமான **சரீரம்** (2) இச்சரீரத்தின் வழியாய்ப் புறப்பொருள்களையும் அகப்பொருள்களையும் அறியும் **மனம்**. (3) சரீரத்தையும் மனத்தையும் இயக்கி அவைகளை அடக்கியாளுகின்ற **ஆன்மா**. இந்த மூன்றினுள் சரீரம் பருப்பொருளான சடப்பொருளாதலாலும், மனம் இயக்கினாலன்றி அது தானே இயங்காதாதலாலும் அது அவ்வளவு பயனுடைய தன்று. மனம் என்பது சடவஸ்துவேயாயினும் அது சரீரத்தைப் போல் கட்புலனுக்குத் தோன்றும் பருப்பொருளாயில்லாமல் **நுட்பமும் வியாபகமும் வாய்ந்த அற்புதமான சக்தியாக** இருப்பதால் அதன் அருமை பெருமை அளப்பரும் தரத்தனவல்ல. இந்த மனம் **அகமனம், புறமனம்** என்று இருவகைப்படும். மனிதர்களின் உறக்க நிலையிலும், கனவு நிலையிலும் பஞ்சேந்திரியங்களின் உதவியின்றி புறம்பே நிகழும் நிகழ்ச்சிகளை அறிவது அகமனம் என்று பெயர் பெறும். சாக்கிராவஸ்தையில் பஞ்சேந்திரியங்களின்

யும்; காலையில் அரும்பி மாலையில் மலர்ந்து நள்ளிரவில் வாடி உதிரும் ரோஜா
மலரைப்போல் சிறிது காலத்திற்குள் 'அழகு' என்பது தோன்றி மறை
யும் இயல்புடையதென்பதையும் நான் நன்கறிந்துளேன். ஆகவே சிறந்த
குணமும், சாதாரணமான அழகும், மனமொத்து நடக்கும் திறமும் வாய்ந்த
ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய
விருப்பமாகும்.

ஒரு நாள் சாயந்திரம் நான் ஒரு நோயாளி வீட்டுக்குச் சென்று சிகிச்சை
செய்துவிட்டுத் திரும்பும்போது, குலாம் காதிறு முன் வசித்து வந்த மாளிகை
வழியாக வரும்படி நேரிட்டது. அம்மாளிகையின் தெருவாயிற் படிக்கு
நேராக வந்தபோது அம்மாளிகைக்குள் சிலர் பேசிக்கொண்ட சத்தம் என்
காதில் விழுந்தது. ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தேன்,—ஏனெனில் குலாம்
காதிறு இறந்த பிறகு அம்மாளிகையை ஒரு கனவான் விலைக்கு வாங்கி
விட்டார் என்று எனக்குத் தெரிந்திருந்த போதிலும், அந்த மாளிகையில் குடியி
ல்லை என்பதையும், நெடுநாளாக அது பூட்டப்பட்டிருந்த தென்பதையும் நான்
அறிவேன். இப்போது அந்த மாளிகைக்குப் புதிதாய்க் குடிவந்திருப்பவர்கள்
யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்னும் அவா, ஏதோ காரணத்
தால் எனக்கெழுந்தது. உடனே நான் அம்மாளிகையினுள் நுழைந்து தோட்
டத்தைச் சுற்றிப் பார்ப்பவனைப் போல், மெதுவாக நடந்து கொண்டே சென்
று மாளிகையின் பின் புறத்தை அடைந்தேன். அங்கே ஒரு மரத்தடியில் ஒரு
இந்து ஸ்திரீயும், மகமதியக் கனவானும் சம்பாஷித்திருப்பதைக் கண்டேன்.
கூர்ந்து நோக்கவே, அங்கே நின்ற கனவான் மாஜிஸ்டிரேட் மகம்மதாலி என்
பதை நான் அறிந்து கொண்டேன்,—ஆனால் அந்த ஸ்திரீ யார் என்பது என
க்கு விளங்கவில்லை. அவள் அணிந்திருந்த ஆடையாபரணங்களைக் கொண்டு
அவள் ஒரு பெரிய தனவந்தன் வீட்டைச் சேர்ந்தவளாயிருக்க வேண்டு மென்
பதை நான் அறிந்து கொண்டேன். அவர்களுடைய கண்ணில் அகப்படக்
கூடாதென்று கருதி மாளிகையின் தென்புற மதிளோரமாய் மெதுவாக நட
ந்து சென்று, மாளிகையின் பின் புறமாயுள்ள தென்னந் தோப்புக்குள் நுழை
ந்து விட்டேன். அத்தோப்பிலிருந்தபடியே தெருவிற்குச் செல்லுவதற்கு
ஒரு வழியும் இருந்தது. தோப்பிற்குள் நுழைந்தபோது அங்கே ஒரு அதிசய
மான காட்சியை நான் கண்டேன்,—ஸ்தம்பித்து நின்றேன்.

வெண்மலரும் மருக்கொழுந்தும் கலந்து சூடிய கருங்கூந்தலும், பிறை
மதி நிகர்த்த திருநுதலும், காமன் வில்லனைய கரும்புருவமும், பாலென வெளு
த்த வெண்விழி நடுவே நஞ்செனக்கரிய கண்மணி சுழலும் அஞ்சனந் தீட்டிய
விசாலமான நேத்திரமும், மாங்கனிக்கதுப்பெனப் பாங்குட னமைந்த ஓங்கு
சீர்க்கன்னமும், குமிழம் பூப்போன்ற அமைவுறு நாசியும், வள்ளையிலை யென

நீண்டு ஊசல்போலசையும் மாசிலாச் செவியும், பவழ இதழையும் அமிழ்த மொழியையும் முத்தனைய பல்லையும் நவையற்ற நாவையும் ஒருங்கே கொண்ட வாயும், வலம்புரிக் கழுத்தும், பச்சை மூங்கிலைப்போல வழுவழுப்பாயும் கரைவு சரிவாயுமுள்ள புஜமும், கரும்பினைப்போல் திரண்டுருண்ட முன்கையும், காந்தள் நிகர்த்த கரமும், தாமரை முகையினைப் போன்ற தனமும், மடிப்புடைய சிறு வயிறும், பிடியுளடங்கும் துடியிடையும், வாழையைப் பழித்த பெருந்துடையும், சிறார் விளையாடும் சில்லினை யொத்த முழந்தாளும், சிலம்பு கிடந்து சிலம்பும் புறங்காலும், நாயின் நாவை நிகர்த்த மென்சீறடியும், இன்னோரன்ன பல்வகைச் சிறப்பும் ஒருங்கமைந்த ஒரு மங்கைநல்லாள் தன்னந் தனியே அத்தென்னந்தோப்பினுள் ஒரு மாத்தடியி லுட்கார்ந்து, ஆழ்ந்த சிந்தையோடு தன் கையிலோர் புத்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டிருந்த அற்புதக்காட்சியே என்னை ஸ்தம்பித்து நிற்கும்படி செய்தது. அவள் மாந்தளிர் மேனியள்; பங்கயமலரையும் பங்கமில்மதியையும் நிகர்த்த முகத்தினள்; அன்பு ததும்பும் அகத்தினள்!

அவள் என்னை நோக்காமல் தான் கையில் விரித்துவைத் திருந்த புத்தகத்தை நோக்கியபடியே உட்கார்ந்திருந்தாள். நான் சில நிமிஷங்கள் வரையில் தம்மாற் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் அமைந்திருக்கும் இயற்கை அற்புதங்களை இறைவன் அருவமாயும் வியாபகமாயும் மறைந்திருந்து நோக்கி வியப்பதைப்போல், அப்பைந்தொடியின் பேரழகைமறைந்திருந்து நோக்கியபடியே வியந்துநின்றேன். கைவன்மை வாய்ந்த ஓவியக்காரன் ஒருவன் அவளை அச்சமயம் பார்த்திருப்பானாயின் 'அவளுடைய அழகைப் படத்திலெழுதிப் பார்க்கவேண்டும்' என்று நினைப்பான், இயற்றமிழ்ப் புலவர் ஒருவர் அவளை அவ்வமயம் கண்டிருப்பாராயின், 'அப்பாவையின் சரீர உறுப்புக்களைப் பாவிலமைத்தே பாராட்டவேண்டும்' என்று கருதுவார். ஆனால் நானோ கைவன்மை வாய்ந்த ஓவியனுமல்லன். நாவன்மை பெற்ற கவிவாணனுமல்லன். ஆகவே "நான் மணந்து இன்புறுதற்காகவே இறைவன் அவளைச் சிருஷ்டித்தார்" என்று நான் கருதினேன். என்? அதிகம் சொல்லுவானேன்? குலசீம் காதிறுவினுடைய பிரசங்கத்தாலும், சிவப்பிரகாசம் ஆதியில் மிக விரித்துக் கூறிய உபதேசத்தாலும், நான் அறிய முடியாதிருந்த ஒரு உண்மையை, அறியும்படியும் நம்பும்படியும் அந்த மங்கை செய்துவிட்டாள்,—அதாவது காதலின் சிறப்பை ஒரு நிமிஷத்தில் நான் அறிந்துகொண்டேன்.

இவ்வுலகத்தையும், இவ்வுலகில் காணப்படும் ஏனைய பொருள்களையும் நான் அறவே மறந்து, அக்கட்டழகியின் தோற்றத்தில் கட்டுப்பட்டவனாய் அறிவொருங்கி நின்றபோது, என் பின்புறமாக யாரோ நடந்துவருவதுபோன்ற ஒரு சத்தம் என் காதில் விழுந்தது. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

த்தில் ஒரு வேலைக்காரி ஒருகடிதத்தை மோகனாங்கியிடம் கொண்டுவந்து கொடுத்தாள். அவள் அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துவிட்டு என்னிடம் கொடுத்தாள். நான் அதைப் படித்தபோது அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"என் பிரியமுள்ள மோகனாங்கியே.—காந்திமதியின் சரீரநிலைமை எனக்கு மிகுந்த கவலையையும் அச்சத்தையும் கொடுக்கிறது. அவளுடைய வியாதி வரவர அதிகரிக்கிறது. எந்த வைத்தியரை அழைத்துக் காட்டினால் அவள் குணமடைவாள் என்பதை இக்கடிதம் கொண்டுவரும் வேலைக்காரியிடம் சொல்லியனுப்பவும், மிகவும் அவசரமான காரியம்.

உன் அன்பார்ந்த சிவகாமி"

நான் கடிதத்தைப் படித்த பிறகு "வைத்தியரே! ஆயுர்வேத பண்டிதர் பத்மநாபரை வரவழைத்துப் பார்த்தால், நலமாயிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது" என்று மோஹனாங்கி கூறி அவருடைய பெயரையும் விலாசத்தையும் ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி அதை வேலைக் காரியிடம் கொடுக்கப் போனாள்.

"அம்மா! நீங்கள் என்விஷயத்தில் இவ்வளவு கொடுமை பாராட்டக் காரணம் என்ன? எனக்கும்,நான் கொண்டுள்ள எண்ணத்திற்கும் நீங்கள் யமனைப் போல் குறுக்கே நிற்கின்றீர்களே? 'பெண்டிரிற் கூற்றமன்னாள்' என்று கம்பர் கூறியது உங்கள் விஷயத்திலும் பொருத்தமுடையது என்பதை தாங்கள் கூறிய வார்த்தைகளால் இப்போது நான் உணர்ந்தேன். நான் உங்களுக்கு எந்தவிதமான தீங்கும் இழைக்கவில்லையே? அவ்விதமிருந்தும் என்னை நீங்கள் விரோதிபோல் பாவித்து, நானிருக்கும்போது வேறொரு வயித்தியரைத் தேடுவதற்குக் காரணமென்ன?" என்றுநான் மிகுந்த பரிவுடனும் அனுதாபத்துடனும் மோகனாங்கியை வினவினேன்.

"விரோதியா? இல்லை; நான் உம்முடைய விரோதியல்லேன். ஆனால், உம்முடைய சிநேகிதியாக நான் இருக்கவேண்டுமென்று இன்னமும் நீர் என்னைக் கேட்டுக் கொள்ள வில்லையே? என்று புன்சிரிப்போடு மோகனாங்கி கூறினாள்.

இவ்வார்த்தைகளினால், மோகனாங்கியின் சுபாவம் இத்தகைய தென்பதையும், அவளுடைய குணாதிசயங்கள் இத்தகைய வென்பதையும் நான் நன்கறிந்து கொண்டேன். பிறர் தன்னைப் புகழ்வதையும், பிறர் தன்னிடம் அடங்கி நடப்பதையும் தனக்கொருபெரிய கௌரவமாகவும் மதிப்பாகவும் கருதும் இயல்புடையவள் அவள் என்பது, எனக்கு அங்கையில் நெல்லியென விளங்கிற்று

நான் அவளைச்சிறிதும் பொருட்படுத்த வில்லை என்பதையும் அவள் நன்கறிந்திருக்கிறுள் என்பதும் எனக்கு இனிது புலப்பட்டது. திருச்சியிலுள்ள மற்றவர்களை அவள் எப்படித்தன் அதிகாரத்திற்கும் ஆக்கினைக்கும் உட்பட்டு நடக்கும்படி செய்து கொண்டிருக்கிறளோ, அப்படியே என்னையும் தன் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்கும்படி செய்துவிடவேண்டுமென்பது அவளுடைய முக்கியமான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அவள் பூர்த்திசெய்து கொள்ளும்படியான விதமாய் இப்போது நான் நடக்கவேண்டியவனுனேன்.

ஆ! ஆசை வெட்கமறியுமா? 'அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்?' காதல் பெருமை சிறுமையைக்கருதுமா? காந்திமதியின் நிமித்தம் நான் என்னுடைய சுதந்தர உணர்ச்சியையும் தற்பெருமையையும் அடியோடு ஒழித்துவிட்டு, மோஹனங்கிக்கு அடிமையானேன். அவளுடைய காலில் விழுந்தாவது, என்னையே காந்திமதிக்கு வைத்தியம் பார்க்கும்படி சிபார்சுசெய்யவேண்டும் என்று, அவளைக் கேட்டுக்கொள்ளுவதாகத் தீர்மானித்தேன்,—தீர்மானித்தபடியே செய்தேன். கடைசியில் கூற்றினுங்கொடிய அவளுடைய மனம், ஒரு சிறிதுஇளக ஆரம்பித்தது.

''வைத்தியரே! உம்முடைய விருப்பத்தை நான் கெடுப்பானேன்? காந்திமதிக்கு நீரே வைத்தியம் செய்யும் என்று மோகனங்கி என்னிடம் கூறி, ஒரு சிபார்சுக் கடிதமும் கொடுத்தாள். நான் அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சபாநாயகத்தின் மாளிகைக்குச் சென்றேன்.

நான்காமதிகார முடிந்தது,

ஐந்தாம் அதிகாரம்.

சிகிச்சை செய்து குணப்படுத்தல்.

"கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வளி காயும்
பெருஞ்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்கு—அருஞ்சிரம
மாற்றியூ ணீத்தவை தீர்த்தார் ஆசாராய்ப்
போற்றியூ ணுண்பார் புரந்து.—ஏலாதி

வைத்தியனுடைய தொழில் எவ்வளவு பொறுப்புள்ளதும் கடினமானதுமான தொழில் என்பதையும், அத்தொழில் செய்பவன் எவ்வளவு இளகிய நெஞ்சையும் கடின மனத்தையும் ஒருங்கே பெற்றவனுய் இருக்கவேண்டியிருக்கிற தென்பதையும், சாதாரண ஜனங்கள் பெரும்பாலும் அறியார்கள். உண்மையான வைத்தியன், நோயாளி படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தவுடன், இன்னதென்று புலப்படுத்த முடியாத ஒருவித உணர்ச்சி அவன் மனதில் எழுகின்றது. சாதாரண ஜனங்களுக்கு இயல்பாயுள்ள மனப்போக்குகளையும்,